செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

இலக்கியப் புலம்

நடத்தும்

# தமிழ் மருத்துவ மரபுகள்

## பயிலரங்கம்-05

(11-07-2023 முதல் 20-07-2023 வரை)

## அறிவிப்பும் அழைப்பும்

உலகெங்கினும் வழங்கிவருகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளில் மிகப் பழைமையான மூல மொழிகளாக விளங்கக்கூடிய சிலவற்றில் செம்மொழித் தமிழுக்குத் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகள் பலவுள. அவற்றில் தமிழுக்கே உரித்தான துறைகளாகத் தமிழ் வானியல் மரபு, தமிழ்க் கணிய மரபு, தமிழ் மெய்யியல் மரபு, தமிழ் வேளாண்மை மரபு, தமிழ் மருத்துவ மரபு, தமிழ் நடன மரபு, தமிழிசை மரபு, தமிழ்க் கட்டடக் கலை மரபு என்பனவாக அவை நீளும்.

மேற்கண்ட சிறப்பிற்குரிய மரபுகளில் மாந்த இனத்தின் அகப்புற நலவாழ்விற்கும் போற்றுதலுக்கும் உரியதாக விளங்குவது தமிழ் மருத்துவ மரபாகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் உளவியல்சார் மருத்துவக் குறிப்புகள் பல உள. சித்த மருத்துவத்தில் தலையாயவராகப் போற்றப்பெறும் அகத்தியர் தொல்காப்பியருக்கு ஆசிரியராக விளங்கினார் என்னும் கருத்தும் தமிழுலகில் நிலவிவருகிறது. சங்க இலக்கியங்கள் பல அரிய மருத்துவச் செய்திகளைக் கூறுகின்றன. கடுகு பெருந்தேவனார், காவட்டனார் (புல்), போந்தைப் பசலையார் (பனை), வெள்ளெருக்கிலையார் எனச் சங்கப் புலவர்கள் மூலிகைகளின் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர். மருத்துவர் தாமோதரனார் என்ற சங்கப் புலவர் மருத்துவம் செய்தொழிலாலேயே அறியப்படுகிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் மருத்துவத்திற்கென்றே தனியொரு அதிகாரம் கொண்டுள்ளது. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய

நூல்கள் தமிழ் மருத்துவத்தின் பெயராலேயே இயற்றப்பட்டவை. அகத்தியர், நந்தி தேவர், திருமூலர், போகர், புலிப்பாணி, கோரக்கர், கொங்கணர், இடைக்காடர் முதலானோராகப் பதினெண் சித்தர் மரபு தமிழ் மருத்துவத்தினைச் சித்த மருத்துவமாக வளர்த்தெடுத்துள்ளது. சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழரின் தற்காப்புக் கலைகளோடு தமிழ் மருத்துவமும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சீனத்திற்கும் பரவியது. அகத்தியர், போகர் போன்ற சித்தர்களின் வரலாறே இதற்குச் சான்றாகும். தமிழர்களின் மருந்துப் பொருட்களான சாதிக்காய், மிளகு, பட்டை, இலாமிச்சை வேர், வெட்டிவேர், இஞ்சி, ஏலம், சுக்கு, கருவப்பட்டை, மயிலிறகு, நல்லெண்ணெய் எனப் பல மூலிகைச் சரக்குகள் கிரேக்க, உரோமப் பேரரசுகளின் காலத்திலேயே மேற்கு நாடுகளுக்குச் சென்றன. உலக மருத்துவத்தில் தமிழ் மருத்துவத்திற்கென்றே பல சிறப்புகளும் தனித்தன்மைகளும் உண்டு. உலகில் இன்றளவும் மரபு அறுபடாமல் வழக்கில் உள்ள மருத்துவ முறைகளில் தமிழ் மருத்துவமும் ஒன்று. உலகில் வேறெந்தத் தொன்மையான மருத்துவ முறைகளிலும் காணப்படாத இரசவாதம், பற்பம், பாசாணம், செந்தூரம் என்பனவான மருந்தியல் முறைகள் தமிழ் மருத்துவத்தில் மாத்திரமே உள்ளன. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய வகைமைகளையுடைய அமைப்பைக் கொண்ட தமிழ் மருத்துவ மரபுகளின் தொன்மை, தனித்தன்மை பற்றியதாக இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

தமிழ் மருத்துவ மாணவர்கள் நமது மருத்துவ மரபு முறைகளையும் மரபுசார்ந்த சிறப்புக் கூறுகளையும் செயல்முறையுடன் கூடிய பயிற்றுரையின் மூலமாகக் கற்றறிந்து கொள்ளுதலை முதன்மை நோக்கமாக இப்பயிலரங்கம் கொண்டுள்ளது. தமிழ் மருத்துவ மாணவர்கள் நேரடியாகப் பயன்கொளத்தக்கவாறு நிகழ்த்தப்பெறவுள்ள இப்பயிலரங்கில் சித்த மருத்துவத் துறை சார்ந்த மருத்துவ அறிஞர்கள், தமிழறிஞர்கள் பயிற்சி அளிக்கவுள்ளனர். சித்த மருத்துவ முதுகலை மாணவர்களையும் முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றிடச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அழைக்கின்றது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை – 30.
2. பயிலரங்கம் நடைபெறும் நாட்கள்: 11-07-2023 முதல் 20-07-2023 வரை பத்து நாட்கள்.

3. பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 – 1.00 வரை, பிற்பகல் 02.00 – 05.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. இந்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. பகலுணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விழைவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தினை நிறைவுசெய்து workshope@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ளவேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புலனம்/மின்னஞ்சல் வழியாக ஆணை அனுப்பிவைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: 04-07-2023. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ளவேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 05-07-2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிகளைப் பின்பற்றிட வேண்டும்.

सत्यमेव जयते

## இலக்கியப் புலம்

நடத்தும்

## தமிழ் மருத்துவ மரபுகள்

## பயிலரங்கம் - 05

(11.07.2023 - 20.07.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| Name | தமிழ் | | | | | | நிழற்படம்/ Photo | |
| | | English | | | | | | | |
| 2. | பிறந்த நாள்/வயது Date of Birth/Age | | | | | | | | |
| 3. | பாலினம் \| Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | | | |
| 4. | வகுப்பு \| Class (✓) | | | பொது/ General | | இ.பி.வ.\| OBC | | பட்டியல் இனம் \| SC/ST | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | | | |
| 6. | முதுகலை / முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள் / ஆண்டு \| Date of Joining & year in M.D. & Ph.D. | | | | | | | | |
| 7. | முதுகலை & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M.D. & Ph.D. Research Topic | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br>\| University/College/Institute Address (Contact Number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண்<br>\| Residential address & Contact Number | |
| 10. | புலன எண் \| WhatsApp Number | |
| 11. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No |
| | | |

நெறியாளர்/துறைத் தலைவர்

முதல்வர்/பதிவாளர் உரிய முத்திரையுடன்

இடம்:

நாள்: